வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராம்குமார் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | முருகேசன் | தொழில் | : | சுயதொழில் |
| ஊர் | : | பெரியகுளம் | வயது | : | 25/2025 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 08.01.2025

<u>அரசு தரப்பில் 8ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் பெரியகுளம் வடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆர்.கே.சோலார் என்ற நிறுவனமும் மற்றும் சிசிடிவி Sales and Service தொழிலும் செய்து வருகிறேன். வடுகபட்டியில் உள்ள அண்ணாமலை கோடவுனில் சிசிடிவி கேமரா பொருத்தி பராமரித்து வந்தது நான்தான். என்னிடம் போலீசார் மேற்படி கோடவுனில் சிசிடிவி கேமரா பொருத்தியது சம்பந்தமாக விசாரித்தார்கள், நான்தான் மேற்படி கோடவுனில் சிசிடிவி கேமரா பொருத்தினேன் என்று சொன்னேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு விவரங்கள் எதுவும் தெரியாது. போலீசார் என்னை போன் மூலமாக விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
08.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தமிழ்செல்வன் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | ராமச்சந்திரன் | தொழில் | : | டாஸ்மாக் ஊழியர் |
| ஊர் | : | ஜெயமங்கலம் | வயது | : | 50/2025 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 08.01.2025

<u>அரசு தரப்பில் 9ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் ஜெயமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஜெயமங்கலம் டாஸ்மாக் கடையில் ஊழியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.02.2022 தேதியில் மேற்படி ஜெயமங்கலம் டாஸ்மாக் கடையில் ஊழியராக பணியாற்றியபோது, பெரியகுளம் காவல் நிலையத்திலிருந்து எங்கள் டாஸ்மாக் கடைக்கு போலீசார் வந்து, கடையில் உள்ள சிசிடிவி புட்டேஜை பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். பின்னர் போலீசார் கடையில் உள்ள சிசிடிவி புட்டேஜை பதிவு செய்து எடுத்து சென்றார்கள். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

டாஸ்மாக் கடைக்கு தினமும் ஆயிரக்கானவர்கள் வருவதால் யார், யார் மது வாங்கி செல்கிறார்கள் என்று என்னால் நினைவு வைத்திருக்க முடியாது என்று சொன்னால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
08.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழரசன் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | நாகசுந்தரம் | தொழில் | : | பெட்ரோல் பங்க் கேசியர் |
| ஊர் | : | தாமரைக்குளம் | வயது | : | 33/2025 |

**<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 08.01.2025

**<u>அரசு தரப்பில் 10ம் சாட்சி முதல் விசாரணை</u>**

நான் தாமரைக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வடுகபட்டியில் ஸ்ரீபாலகிருஷ்ணா எண்டர்பிரைசஸ் என்ற பெட்ரோல் பங்கில் கேசியராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. கடந்த சில நாட்களுக்கு முன்பு என்னை நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு போலீசார் அழைத்தார்கள் அதனால் வந்தேன். என்னை போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அரசு தரப்பில் அறிவிக்கக்கோரி குறுக்கு விசாரணை செய்ய கூடுதல் அரசு குற்ற வழக்கறிஞர் அனுமதி கோரினார், சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான், எனது போலீஸ் விசாரணையில் கடந்த 2.2.2022 தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் 1ம் எதிரியும், வீரமுத்துவும், இறந்துபோன போதுராஜாவும் ஒன்றாக ஒரே பைக்கில் வந்து பெட்ரோல் போட்டுவிட்டு சென்றார்கள் என்றும், அதன்பிறகு அன்று இரவு 9 மணியளவில் 1ம் எதிரி மட்டும் தனியாக வந்து வாட்டர்கேனில் பெட்ரோல் வாங்கியுள்ளார் என்றும், அந்த பதிவுகள் பெட்ரோல் பங்கில் உள்ள கேமராவில் பதிவாகி இருந்தது என்றும், மேற்படி தகவலை எனது ஓனருக்கு தெரிவித்து விட்டு, வழக்கிற்கு உதவியாக கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ள வீடியோ பதிவுகளை எந்தவித மாற்றமும் செய்யாமல் நகல் எடுக்க ஆய்வாளருடன் வந்த டெக்னீசியனுக்கு உதவியாக இருந்தேன் என்றும் சொல்லவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
08.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.